


வாராந்த மின்னிதழ்
உண்மையின் முகம்
# கல்முனை NET e paper
kalmunainet.com






தமிழ் மொழியினருக்கான தகவல் தளம் | பிலவ வருடம் ஆடி 15 (31.07.2021) இதழ் : 26


கல்முனையில்...



மட்டக்களப்பில்...


வாழைச்சேனையில்...

## இலங்கைக்கு பொருளாதாரத் தடையா?

(நமது நிருபர்)

இலங்கை மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கின்ற யோசனைக்கு பிரிட்டன், ஜேர்மன் மற்றும் பல முக்கிய நாடுகள் விருப்பம் வெளியிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வரும் செப்டம்பரில் ஜெனீவாவில் 48ஆவது ஐ.நா மனித உரிமைப் 02

## ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி வேண்டி.. கிழக்கில் பரவலாக ஆர்ப்பாட்டங்கள்!

(நமது நிருபர்)

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிக்கு அமர்த்தப்பட்டு பின்னர் எரிகாயங்களுடன் உயிரிழந்த சிறுமி ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதிகோரி, கிழக்கு மாகாணமெங்கும் பரவலாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

நேற்று(30) வெள்ளிக்கிழமை பகல் கல்முனை, மட்டக்களப்பு, வாழைச்சேனை போன்ற இடங்களில் இவ்வார்ப்பாட்டங்கள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

**கல்முனையில்...**

கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனையின் ஏற்பாட்டில், மாதர் அமைப்புக்களின் பங்குபற்றுதலுடன் சுகாதார நடைமுறைகளுடன் இந்த ஆர்பாட்டம் இடம் பெற்றிருந்தது.

இளைஞர் சேனையின் தலைவர் ந.சங்கீத் தெரிவிக்கையில்:

உயிரிழந்த சிறுமிக்கான நீதியை அரசாங்கம் பெற்றுக் கொடுக்க 02

## கொரோனா மீண்டும் தாண்டவம்! கட்டுப்பாடுகள் இறுகலாம்!


### இராணுவத்தளபதி எச்சரிக்கை

(நமது நிருபர்)



நாட்டில் நாளாந்தம் பதிவாகும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு மாதத்தின் பின்னர் மீண்டும் அதிகரித்துள்ளது என கொவிட் 19 தடுப்புச் செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் 02

## கண்டிக்கு கொண்டு செல்லப்பட்ட ஹிசாலினியின் உடலம்!



(நமது நிருபர்)

தோண்டி எடுக்கப்பட்ட சிறுமி ஹிசாலினியின் உடலம் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் கண்டி - பேராதெனியவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான 02

## ஆசிரியர்களுடன் அனைத்து அரச ஊழியர்களுக்கும் சம்பளம் அதிகரிப்பு?

(நமது நிருபர்)

அதிபர் ஆசிரியர்களுடன் அனைத்து அரச ஊழியர்களுக்கும் சம்பளம் அதிகரிக்கப் படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள பிரச்சினைக்கு தீர்வு வழங்க வரவு செலவு திட்டத்தில் அவதானம் 02

## என்னை இனவாதியாக சித்தரிக்க மேற்கொள்ளப்பட்ட அரசியல் சூழ்ச்சி!

### ஊடக மாநாட்டில் ஜெயசிறில் காட்டம்

(நமது நிருபர்)



என்னை இனவாதியாக சித்தரித்து அரசியலிலிருந்துஓரங்கட்ட மேற்கொள்ளப்பட்ட அரசியல் சூழ்ச்சியே இது. எனக்கும் நபிகள்நாயகம் பற்றிய பதிவுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

என்று காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் ஊடக மாநாட்டில் தெரிவித்தார்.

குறித்த ஊடக மாநாடு நேற்று(30) பிற்பகல் காரைதீவு பிரதேசசபை 02

## மட்டக்களப்பில் நான்கு பகுதிகள் சிவப்பு வலயங்கள்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு பிராந்தியத்தில் மட்டக்களப்பு கோறளைப்பற்று மத்தி ஏறாவூர் காத்தான்குடி ஆகிய பகுதிகள் தொடர்ந்து சிவப்புவலயங்களாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இதுவரை இரண்டு இலட்சத்து 78 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் 02

## கல்முனை சாதனை படைக்கிறது!



(நமது நிருபர்)

கல்முனை பிராந்தியம் வக்சீன் ஏற்றுவதில் மீண்டும் சாதனை படைத்துள்ளது.

நேற்று முன்தினம்(29) இரண்டாம் கட்டமாக 42800 சினோபார்ம் கல்முனைப் பிராந்தியத்திலுள்ள 13 சுகாதாரப் பிரிவுகளிலும் வழங்கப்பட்டது.

இது கிழக்கு மாகாணத்தில் ஒரு பிராந்தியத்தில் ஒரே நாளில் ஏற்றப்பட்ட மிக அதிகமான எண்ணிக்கை ஆகும்.

தகுதியான 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 50% ஆனவர்கள் இன்றுடன் தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டனர்.

கல்முனை பிராந்தியத்திற்கு இறுதியாகவே தடுப்பூசிகள் வழங்கப்பட்டு இருந்தாலும் தடுப்பூசி வழங்கலில் பல மாவட்டங்களை பின்தள்ளி முன்னே நிற்கிறது.

## திங்கள் முதல் அனைத்து அரச ஊழியர்களும் கடமையில்

(நமது நிருபர்)

கொவிட் வைரஸ் பரவல் காரணமாக தடைப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடுகள் அடுத்த திங்கள முதல் வழமைக்கு திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

இதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையில் கட்டுப்பாடுகள் நீடித்தாலும் அனைத்து அதிகாரிகளும் கட்டாயம் அன்றைய தினம் முதல் பணிக்கு வர வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பன்குடாவெளியில் வீடு கையளிப்பு!

(நமது நிருபர்)

மட்டு.மாவட்டத்தில் செங்கலடிப் பிரதேசத்திலுள்ள பின்தங்கிய பன்குடாவெளிக் கிராமத்தில் வாழ்வாதாரமற்ற ஒரு குடும்பத்திற்கு 'ஜேர்மன் நம்பிக்கை ஒளி' ஸ்தாபனம் வீடு ஒன்றை நிருமாணித்து கையளித்துள்ளது.

இக் கையளிக்கும் வைபவம் நேற்று(30) வெள்ளிக்கிழமை பகல் ஏறாவூர்ப்பற்று பிரதேசசபைத் தவிசாளர் எஸ். சர்வானந்தன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக 'ஜேர்மன் நம்பிக்கைஒளி' ஸ்தாபனத் தலைவரும் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்து சிறப்பித்தார்.

கூடவே வாழைச்சேனை பிரதேசசபை உறுப்பினர்கள் சமூக ஆர்வலர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்டோரும் கலந்து சிறப்பித்தனர்.

## ஹிஷாலினியின் மரண...

வேண்டும். அனேகமான இடங்களில் பணத்திற்காக தரகர்கள் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துகின்றனர். எனவே சிறுவர்களை வேலைக்கு அமர்த்துகின்ற வீட்டார் வர்த்தகர்கள் இனங்காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். பெற்றோர்களிடம் 16 வயதிற்குட்பட்ட தமது பிள்ளைகளை வறுமை நிமித்தம் வேலைக்கு அனுப்புவதை நிறுத்துங்கள் என கோரிக்கை விடுக்கின்றேன். பெற்றோர்கள் தம் நிலையை கூறி உதவிகளை கிராம சேவகர் பிரதேச செயலாளர் தனவந்தர்களின் ஊடாக உதவிகளை பெற முடியும் என்றார்.

**மட்டக்களப்பில்...**

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மகளிர் அணி மற்றும் பொது அமைப்புகள் ஒன்றிணைந்து ஹிஷாலினியின் மரணத்துக்கு நியாயம் வேண்டி, 'சிறுவர்களைச்சிதைக் காதீர்கள்' எனும் தொனிப் பொருளில் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள வீதி சுற்று வட்டத்தில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள வீதி சுற்று வட்டத்தில் நூற்றுக்கணக்கான பெண்கள் உட்படப் பலர் ஒன்றிணைந்து' ஹிஷாலினிக்கு நீதிவேண்டும், சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்து, மக்கள் பிரதிநிதி சிறுமியைச் சீரழிப்பதா, சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்து, விசாரணையைத் துரிதப்படுத்து, வீட்டுவேலை செய்வோரைப் பதிவு செய் 'போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறும் கோஷங்கள் எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**வாழைச்சேனையில்..**

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கல்குடா தொகுதி மகளிர் அணியினால் ஹிஷாலினியின் மரணத்துக்கு நியாயம் வேண்டி வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு முன்னா,லுள்ள சுற்று வட்டத்தில் இன்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வாழைச்சேனை பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பித்த கவனயீர்ப்பு போராட்டம் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள வீதி சுற்று வட்டம் வரை சென்று எதிர்ப்புக்களைத் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் ஸோபா ஜெயரஞ்ஜித் தலைமையில் நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் கட்சியின் கல்குடா தொகுதி மகளிர் அணியினர் உட்படக் கட்சியின் முக்கியஸ்தர்களும் ஒன்றிணைந்து ஹிஷாலினிக்கு நீதி வேண்டி போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது 'காமக்கொடுரனை சட்டத்தின் இருந்து தப்பிக்க விடாதே!, சட்டத்தினை வலிமைப்படுத்து!, எமது நீதிக்கான பயணம் எப்போதும் ஓயாது!, அறிக்கை அரசியல் வேண்டாம்!, சிறுமியின் அழுகுரலுக்கு நீதி வேண்டும்!, சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்து!, மக்கள் பிரதிநிதி சிறுமியைச் சீரழிப்பதா!, சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்து!, விசாரணையைத் துரிதப்படுத்து!. வீட்டுவேலை செய்வோரைப் பதிவு செய்' போன்ற வாசகங்களைக் கையில் ஏந்தியவாறும் கோஷங்கள் எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்;.

## இலங்கைக்கு பொருளா...

பேரவை அமர்வு நடக்கவுள்ளது.

இந்த அமர்வில் இலங்கைக்கெதிரான பொருளாதாரத்தடையை அமுல்செய்யும் யோசனை பிரித்தானியா உள்ளிட்ட முக்கிய நாடுகளால் கொண்டுவரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் குறித்த யோசனைக்கு ஆதரவளித்த மெஸிடோனியா, கனடா, ஜேர்மன், மொட்றிகோ ஆகிய நாடுகள் தற்போதும் விருப்பம் வெளியிட்டிருப்பதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கொரோனா மீண்டும்...

சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நாளாந்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு மாதத்தின் பின்னர் நேற்று முன்தினம் 1,900 ஐக் கடந்துள்ளது. இதேவேளை, நேற்று 2300 இற்கும் மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் .

எனவே மக்கள் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காவிட்டால் நாட்டில் மீண்டும் இறுக்கமான கட்டுப்பாடுகளை நாம் விதிக்க வேண்டி வரும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## கண்டிக்கு கொண்டு...

ரிஷாட் பதியுதீனின் கொழும்பு வீட்டில் சிறுவர் உரிமை சட்டத்தை மீறி தொழிலுக்கு அமர்த்தப்பட்ட நுவரெலியா டயகம மேற்கு தோட்ட சிறுமியான ஜூட்குமார் ஹிஷாலினி தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் 15.07.2021 அன்று உயிரிழந்தார்.

இச்சிறுமியின் இறப்புக்கு பின் அவரது உடல் கொழும்பு வைத்தியசாலையில் பிரேத பரிசோதணைக்கு உட்படுத்தப்பட்டு சவப்பெட்டி முற்றாக மூடப்பட்ட நிலையில் சிறுமியின் பெற்றோருக்கு கையளிக்கப்பட்டது.

இந்த நிலையில் சிறுமியின் மரணத்தில் தமக்கு சந்தேகம் இருப்பதாக சிறுமியின் பெற்றோர் அறிவித்திருந்த நிலையில் புதைக்கப்பட்ட உடலம் நேற்று(30) காலை மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டது.

உடலம் அடங்கிய பேழையை சரியாக 12.20 மணிக்கு பாதுகாப்பாக குழியிலிருந்து மீட்டனர். அங்கு போடப்பட்டிருந்த மேசையில் சடலம் வைக்கப்பட்டு சவப்பேழை கதவு அகற்றப்பட்டு உடலம் அடையாளம் காணப்பட்டது.

உடலத்தை அடையாளம் காட்ட விடுக்கப்பட்ட நீதிமன்ற அழைப்புக்கு அமைய சிறுமியின் தாய் தந்தை உள்ளிட்ட உறவினர்கள் வருகை தந்து சடலத்தை நீதவான் முன்னிலையில் அடையாளம் காட்டினர்.

இதையடுத்து சடலம் பொலிஸ் பாதுகாப்புடன் வாகனத்தில் கண்டி பேராதனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

## ஹிஷாலினி ஒரு முற்றுப்புள்ளி

அமர்த்தப்படிருக்கிறார்கள். கூடுதலாக, மலையகத்தில் தோட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் இவ்வாறான தொழில்களுக்கு அமர்த்தப்படுகிறார்கள். இப்படி வேலைக்கு அமர்த்தப்பட்டு இருப்பவர்களின் சோகக் கதைகள் வெளிச்சத்துக்கு வருவதுமில்லை; அதை யாரும் கண்டு கொள்வதுமில்லை. அப்படித்தான் வந்தாலும், பணம் அனைத்தையும் மூடி மறைத்து விடுகிறது.

இதேபோன்றதொரு நிலை கிழக்கு மாகாணத்திலும் காணப்படுகின்றது. மட்டு. படுவான்கரைப் பிரதேசத்திலுள்ள சிறுவர்/ சிறுமியர்கள் வீட்டு வேலைகளிலும் கடைகளிலும் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். இவர்கள், பாலியல் தொந்தரவுகளுக்கும் சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்படுவதோடு மதமாற்றமும் செய்யப்படுகின்றனர். இவைகள் எல்லாம், சர்வ சாதாரணமாகவே நடந்து கொண்டிருக்கையில், தேசியம் பேசும் தமிழ் அரசியல்வாதிகள் வேடிக்கை பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள்.

வறுமைதான் இவைகளுக்கெல்லாம் அடிப்படை என்பது யதார்த்தமான உண்மை. பசி, பட்டினி, கடன் சுமையால் பாதிக்கப்படும் குடும்பங்களின் அவலங்களை, பலவீனமாக பயன்படுத்தி ஆசை வாசை காட்டி, சிறுவர்/ சிறுமியர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுகிறார்கள். அந்தப் பிரதேசங்களில் உள்ள தரகர்களை வைத்து அனைத்தும் கச்சிதமாக முடிக்கப்படுகின்றன.

இவைகள் எல்லாம் கட்சி அரசியல் செய்பவர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் தெரியாமலில்லை. தேர்தல் காலங்களில் சமூகத்தை நேசிப்பதாகவும் சமூகத்தை சீர்திருத்த போவதாகவும் சூளுரைக்கும் இவர்கள், அதனை நினைத்துக்கூட பார்க்காத அளவுக்கு ஏனோதானோவென்று இருந்துவிடுகிறார்கள்.

மலையகத் தோட்டத் பிரதேசத்தை சேர்ந்த சிறுவர், சிறுமிகள், யுவதிகள் கொழும்பு மாநகரில் கூடுதலாக வேலைக்கு அமர்த்தப் படுகிறார்கள் என்பது, மலையக மக்களின் வாக்குகளில் தங்கியிருக்கும், அரசியல் தலைவர்களுக்கு தெரியாமலில்லை. தோட்டத் தொழிலாளர்களிடம் உண்டியல் குலுக்குபவர்கள், அந்த மக்களின் நலனில் முழுமையான அக்கறை கொள்ளவில்லை என்பது ஹிஷாலினியின் மரணம் மூலம் முழுமையாக அம்பலமாகியிருக்கிறது.

ஒரு கொடூரம் நடந்த பின்பு, கொதித்தெழுந்து உணர்ச்சிப் பிழம்பு களாகக் குதிப்பதில் அர்த்தமில்லை. அடிப்படையில், இதற்கு தீர்வு காண முற்பட்டிருக்க வேண்டும். அல்லது தீயில் வெந்து போகும் அளவுக்கு நொந்து போகும், அவர்களது பாதுகாப்பிலாவது அக்கறையுடன் செய்யப்பட்டிருக்கலாம். ஆனால், அந்த அரசியல்வாதிகள் இதுவரை எதுவுமே செய்யவில்லை.

'இ.தொ.கா' போன்ற மாபெரும் தொழிற்சங்கங்கள், மலையகத் தோட்டங்களில் விழிப்புணர்வு பிரச்சாரங்களை முன்னெடுத்து இருக்கலாம். சிறுவர்/ சிறுமிகளை வேலைக்கு அனுப்பும் பெற்றோர்களும் இதில் குற்றவாளிகள் என்பதை அவர்களுக்கு புரியும் படியாக சொல்லி இருக்க வேண்டும். வாக்கு வேட்டைகளில், தோட்டம் தோட்டமாக ஈடுபடுபவர்கள் இதையாவது செய்திருக்கக் கூடாதா?... ஹிஷாலினியின் மரணத்திற்கு பெற்றோர்களும் பொறுப்பாளிகள். இது அவர்களுக்கு புரியுமோ?... புரியாதோ..? தெரியவில்லை. ஆனால், இந்தத் தெளிவு படுத்தலை, தொழிற்சங்கங்களும் பாராளுமன்ற பிரதிநிதிகளும் கட்டாயம் செய்திருக்கவே வேண்டும்.

ஆகக்குறைந்தது, வேலைக்கு அமர்த்தப்படுவோரின் நலன்களை கண்காணிப்பதற்காக பணியகம் ஒன்றையாவது ஏற்படுத்தியிருக்கலாம். வெளிநாட்டில் வேலை செய்வோரின் நலனில் 'வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்' செயல்படுவது போல், மலையகத்தை மையமாகக் கொண்ட பணியகம் ஒன்றை கொழும்பில் செயல்படுத்தினால், இப்படியானவர்களின் நலன்களைப் பாதுகாக்க முடியும். அதேநேரம், அவர்களின் விபரங்களையும் கணணிமயப்படுத்தி கண்காணிப்பை மேற்கொள்ளலாம். தோட்டத் தொழிலாளர்கள் பற்றி பேசுபவர்கள், இப்படியான செயல்பாடுகளை ஏன் இன்னும் முன்னெடுக்கவில்லை?

வறுமையில் வாடுபவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காகவே கொழும்பு நோக்கி வருகிறார்கள். வறுமையை, ஒரே நாளில் ஒழித்து விட முடியாது என்பது உண்மை. அதற்கு தீர்வு காணும் வரை, தற்காலிகமாவது இப்படியான பணியகங்களை ஏற்படுத்தி செயல்படுத்துங்கள்.

இதேநிலை, மட்டு. மாவட்டத்துக்கும் பொருந்தும். தமிழ்த் தேசியம் பேசிப் பேசி, வேலை இல்லை. தமிழர்களை பாதுகாத்துக் கொள்வதில் முழுமையாக ஈடுபடுவதுதான், தமிழர் அரசியலுக்கு யதார்த்தமான அணுகு முறையாக அமையுமென்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

ஹிஷாலினியின் மரணம் ஏற்படுத்தியிருக்கும் விழிப்புணர்வு அரசியல் கட்சிகளுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்தின் கண்ணையும் திறந்திருக்கிறது என்பது கொஞ்சம் ஆறுதல் தருகிறது. வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் சிறுவர்-சிறுமிகள், யுவதிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, கொழும்பு உட்பட நாடு முழுவதும் தேடுதல் நடத்துவதில் அரசு முனைப்பு காட்டுகிறது. அரசியலுக்காக அன்று சமூக அக்கறையுடன் அரசாங்கம் இதனை செய்தே ஆகவேண்டும். வறுமையை பலவீனமாக கொண்டு சிறுவர்-சிறுமிகள் கொத்தடிமைகளாக பயன்படுத்தப்படுவதை தடுக்க அரசு மட்டுமல்ல, அரசியல் கட்சிகளும் பொறுப்புடன் களமிறங்க வேண்டும்.

இதன் மூலம், சமூகச் சீரழிவுகளுக்குள் இன்னும் பல, ஹிஷாலினிகள் சிக்காமல் இருக்க வழிபிறக்கும். டயகம ஹிஷாலினியின் மரணம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தாலும், இதுவே, முற்றுப் புள்ளியாக அமையட்டும்.

## ஆசிரியர்களுடன் அனை...

செலுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் 'சூம்' தொழில்நுட்பத்தில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## என்னை இனவா...

தவிசாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அவர் மேலும் கூறியதாவது:

கண்மணி நபிகள் நாயகம் அவர்கள் ஓர் உன்னதமான அற்புதமான இறைதுதாதர். அவரை அவமதித்ததாக என்னைத் தொடர்புபடுத்தி முகநூலில் சில பிரகிருதிகள் படுகேவலமாக விமர்சித்து வருகின்றனர்.

போலி முகநூல் பதிவை எனதுபெயரில் பதிவிட்டு தூற்ற ஆரம்பித்துள்ளனர். அதையிட்டு நான் கவலைப்படவில்லை. ஆனால் இறைதூதரின் பெயரைப் பயன்படுத்தி தூற்றுவதையிட்டே கவலையடைகிறேன்.

வெறும் அரசியலுக்காக அந்த மாமனிதரை கொச்சைப்படுத்த வேண்டாம். எந்த மதமானாலும் எந்த இறைவனானாலும் பொது வெளியில் இவ்வாறு அவமானப்படுத்தப்படக்கூடாது.

சகல சமயங்களும் போதனைகளும் மனிதர்களை புனிதனாக்கவே நல்வழிப்படுத்துவதற்காகவே தோற்றம்பெற்றன.

சுவாமி விபுலாநந்தர் பிறந்த மண்ணில் பிறந்த நாங்கள் என்றும் ஏனைய மதங்களை மதித்து நடப்பவர்கள். மனிதத்தை போற்றுபவர்கள். இன ஐக்கியத்துடன் செயற்படுபவர்கள்.

எனவே தயவுசெய்து யாரும் அரசியலுக்காக தெய்வங்களை இழுத்து விமர்சிப்பதை நிறுத்துங்கள். எங்களை என்ன வேணுமென்றாலும் ஏசுங்கள் தூற்றுங்கள். ஆனால் இறைதூதரை இறைவனை கொச்சைப்படுத்த வேண்டாம்.

## மட்டக்களப்பில் நான்கு...

இரண்டு இலட்சத்து ஆறாயிரம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த 24 மணி நேரத்தில் மட்டக்களப்பில் 58 பேர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி மட்டக்களப்பில் இதுவரை 8,525 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு, கல்முனை. இலங்கை.
+94 77 6965343
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com
ceditorsaga@gmail.com

குறள் விருந்து

**அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும் ஊதியமும் சூழ்ந்து செயல்.**

எந்த அளவுக்கு நன்மை கிடைக்கும் அல்லது தீமை ஏற்படும் என்று விளைவுகளைக் கணக்குப் பார்த்த பிறதே ஒரு செயலில் இறங்க வேண்டும்.

# ஹிஷாலினி ஒரு முற்றுப்புள்ளி

டயகம ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரி நாடெங்கும் பட்டிதொட்டியெல்லாம் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் தீவிரமடைந்து இருக்கின்றன.

இந்தச்சிறுமியின்மரணம்கொலையா?தற்கொலையா?என்பது இன்னும் ஊர்ஜிதம் ஆகவில்லை. என்றாலும், நாட்டின் இன்றைய பேசுபொருள் இதுவாகத்தான் இருக்கிறது.

முன்னாள் அமைச்சர், இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர், ரிஷாத் பதியுதீனின் கொழும்பு வீட்டில் பணிபுரிந்து வந்த, ஹிஷாலினி ஜூட்குமார் என்ற பெயருடைய இந்தச் சிறுமி, தீமூட்டி படுகாயமடைந்த நிலையில், ஆஸ்பத்திரியில் தீவிர கண்காணிப்பின் கீழ் சிகிச்சை பெற்று வந்த நிலையில், 12 நாட்களின் பின்னர் உயிரிழந்தார்.

இந்தச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுஉள்ளதாகபிரேதபரிசோதனையில்தெரியவந்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இதனையடுத்து, ரிஷாட் பதியுதீனின் மனைவி, மனைவியின் தந்தை, மனைவியின் தம்பி, இந்தச் சிறுமியை வேலைக்கு அழைத்து வந்த தரகர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

நாடே இன்று கொதிநிலை அடைந்து இருக்கிறது. ஹிஷாலினி மரணத்தின் எதிரொலிதான் இது. கவனயீர்ப்பு போராட்டங்களும் பேரணிகளும் மக்களின் ஆவேசங்களாக வெளிபட்டாலும், ஹிஷாலினியின் மரணம் ஏதோவொரு தாக்கத்தை சமூகத்தில் ஏற்படுத்தி இருக்கிறது. சிறுமியை வேலைக்கு அமர்த்தியிருப்பது ஒரு சமூகக் கொடுமை என்பதை நாடே இன்று ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு நிலைமை உச்சமடைந்து இருக்கிறது.

ரிஷாட்டின் வீட்டில் நடந்திருக்கும் இந்த கொடூரத்தின் சூத்திரதாரிகளை கண்டறிய பல கோணங்களிலும் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. யாராக இருந்தாலும், குற்றவாளிகள் தண்டிக்கப் படத்தான் வேண்டும். அதற்காக, ரிஷாட்டை இலக்குவைத்து சேறு பூச முயல்வதும் அரசியலாக்க எத்தணிப்பதும் விசாரணைகளை திசை திருப்பும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல், விசாரணைகளில் பல திடுக்கிடும் தகவல்களும் வெளிவருகின்றன. சிறுவர்/ சிறுமிகளை வேலைக்கு அமர்த்தும் வணிகம், கொழும்பு மாநகரில் தரகர்கள் ஊடாக நடந்து கொண்டிருக்கின்றதென்பது, முதல் கட்ட விசாரணைகளில் ஊர்ஜிதமாகியிருக்கிறது.

இதேநேரம், ரிஷாட் பதியுதீன் வீட்டில் முன்னர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த பெண்களும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப் பட்டிருந்ததாகவும் விசாரணையில் தெரிய வந்திருக்கிறது.

நீதி விசாரணைகள் பக்கம் சாராமல் தன் பணியைத் தொடரட்டும். ஆனால், இந்தச் சிறுமியை வேலைக்கு அனுப்பிய பெற்றோரும், மரணத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என்பதையும் நாம் உரத்துச் சொல்ல வேண்டும்.

ஹிசாலினி போன்று நூற்றுக்கணக்கான சிறுவர்/ சிறுமியர்கள் கொழும்பு மாநகரில் உள்ள தனவந்தர் வீடுகளிலும், ஹோட்டல்களிலும் சிற்றுண்டிச் சாலைகளிலும் தங்களது வாழ்க்கையையும்எதிர்காலத்தையும்தொலைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில், இவர்கள் கொத்தடிமைகளாகவே வேலைக்கு

மிகுதி 2ஆம் பக்கம்

# சிறுவர் சட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்பட வேண்டும்!



நாட்டின் சிறுவர் தொடர்பான அடிப்படைச்சட்டங்கள் மீறப்பட்டு பதினாறு வயதுக்குக் குறைந்தவர்களை வேலைக்கு ‘குறிப்பாக வீட்டு வேலைக்கு’ அமர்த்துவது தொடர்பாகவும், அவ்வாறு அமர்த்தப்படும் பிள்ளைகளுக்கு ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பாகவும் பேசப்பட்டு வருகின்றது. இதனால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் மலையகப் பிள்ளைகள் குறிப்பாக தமிழ்ப் பிள்ளைகள் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்நாட்டின்சிறுவர்தொடர்பானஅடிப்படைச்சட்டத்தின்படி பதினாறு வயதுக்குட்பட்டவர்கள் எதுவித வேலைகளிலும் அமர்த்தப்படக் கூடாது என்பது சட்டமாகவுள்ளதுடன் குறித்த வயது வரையான பிள்ளைகளுக்குப் பாடசாலைக் கல்வி கட்டாயமானது என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான சட்டங்கள் பல நாட்டில் இருந்த போதிலும் அவற்றில் அநேகமானவை மீறப்படுவதையே காண முடிகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் என்பது பொறுப்பு வாய்ந்த ஒரு பதவி. மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதி அவர். அவ்வாறான மக்கள் பிரதிநிதியான ரிஷாட் பதியுதீனின் வீட்டிலேயே சிறுமி ஒருவர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தார் என்பதை நினைத்துப் பார்க்கவே சங்கடமாக உள்ளது. ரிஷாட் பதியுதீனின் வீட்டுக்குள் நடந்துள்ள குற்றங்கள் தொடர்பாக வெளிவருகின்ற தகவல்கள் அச்சமூட்டுபவையாக உள்ளன.

பதினாறு வயதுக்குட்பட்டவர்களை வேலைக்கனுப்பும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் குழந்தைகளை விற்பனை செய்பவர்களாகவும், வேலைக்கு அமர்த்துவோர் குழந்தைகளை பணத்திற்காக வாங்குபவர்களாகவும், தரகர்கள் தரகு வியாபாரத்தில் ஈடுபடுபவர்களாகவும் கணிக்கப்பட வேண்டியவர்களாவர்.

வீட்டுவேலைகளுக்குஅமர்த்தப்படும்எந்தஒருவரும் துன்புறுத்தல்களுக்கோ, துஷ்பிரயோகங்களுக்கோ ஆளாக்கப்படக் கூடாது, அவர்களது சுய கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் சம்பளத்திற்காக மட்டும் உழைக்கும் உழைப்பாளிகள் என்பது நினைவிற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகள் உட்பட பல நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாகவும், ஏனைய வேலைகளுக்காகவும் செல்பவர்கள் அனுபவிக்கும் அவலங்கள், துயரங்கள் அடிக்கடி செய்திகளாக வெளிப்படுகின்றன. இனம், மதம், மொழி கடந்து பலர் வெளிநாடுகளில் பணிப்பெண்களாக வேலை செய்கின்றனர். அவர்கள் பலவிதமாக அவதிப்படுகின்றனர்.

அது மட்டுமல்ல பதினாறு வயதுக்குட்பட்டவர்களை வேலைக்கமர்த்தும் போது அது அவர்கள் குழந்தை தொழிலாளர்கள் என்று கூறப்படுவதுடன் அது சர்வதேச சிறுவர் உரிமைச் சட்டத்தை மீறுவதாக அமையும். அவ்வாறு இடம்பெறுவது சர்வதேச தொழிலாளர் சாசனத்தின்படி தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர்களை அது ஆணோ, பெண்ணோ வேலையில் அமர்த்துபவர்கள், அதற்கு உடந்தையாக இருந்தவர்கள், இருப்பவர்கள் சட்டப்படி தண்டனை வழங்கப்பட வேண்டிய குற்றவாளிகளாக்கப்படுவர். அதுவே பொதுவாக நடைமுறையிலுள்ள சட்டமுமாகும். நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டத்தைக் கடைப்பிடிப்பது கட்டாயமானதாகும்.

**த. மனோகரன்**

(ஓய்வு பெற்ற கைத்தொழில் நீதிமன்ற பதிவாளர்)

# 3ஆவது பூஸ்டர் டோஸ் தேவையா?

உருமாறும் கொரோனாவால் 3ஆவது பூஸ்டர் டோஸ் அளிக்க வேண்டிய தேவை ஏற்பட கூடும் என்று டெல்லி எய்ம்ஸ் இயக்குநர் கூறியுள்ளார்.

இந்தியாவில் கொரோனா 2ஆவது அலை முதல் அலையை விட அதிக பாதிப்புகளை ஏற்படுத்தியது. கடந்த சில வாரங்களாக பாதிப்புகள் குறைந்து மெல்ல கட்டுக்குள் வருகின்றன.

இந்த நிலையை பயன்படுத்தி கொரோனா தடுப்பூசி பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என பலரும் வலியுறுத்தி வருகின்றனர். எனினும்,தொடர்ந்து புதிது புதிதாக உருமாறிய கொரோனா தோன்றுவது அதிர்ச்சி ஏற்படுத்தி வருகிறது.



இதனால், பிரிட்டன்போன்றநாடுகள் பொதுமக்களுக்கு 3ஆவது பூஸ்டர் டோஸ் அளிப்பது குறித்து ஆலோசித்து வருகின்றன. இந்நிலையில், கொரோனா பூஸ்டர் டோஸ் பற்றி டெல்லி எய்ம்ஸ் இயக்குநர் ரன்தீப் குலேரியா கூறுகையில்,

உடலில் நோயெதிர்ப்பு சக்தி குறையும் போது அதனை, பூஸ்டர் டோஸ் மூலம் ஈடு செய்து கொள்ளலாம்.

நாட்டிலுள்ள அனைவருக்கும் 2 டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்ட பின், பூஸ்டர் டோஸ் போடும் பணி தொடங்கப்படும். இந்த ஆண்டு இறுதிக்குள் பூஸ்டர் டோஸ் போடும் பணிகள் தொடங்கும் வாய்ப்புகள் அதிகம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

### எதிர்ப்புசக்தி குறைகிறதா?

இதேவேளை மற்றுமொரு ஆய்வில் ஆறு வாரங்களில் தடுப்பூசிகளின் நோய் எதிர்ப்பு சக்தி குறைகிறது’ என்று கூறப்படுகிறது.

லண்டன்: ஃபைசர், அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் முழுமையாக செலுத்திய ஆறு வாரங்களுக்கு பிறகு அதன் நோய் எதிர்ப்பு சக்தி குறையத் தொடங்குவதாகவும், 10 வாரங்களில் 50 விழுக்காட்டிற்கும் மேலாகக் குறைய வாய்ப்புள்ளது என்று தி லான்செட் இதழில் வெளியிடப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வை இங்கிலாந்தில் உள்ள யுனிவர்சிட்டி காலேஜ் லண்டனின் (*UCL*) ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்டுள்ளனர். நோய் எதிர்ப்பு சக்தியின் அளவு வீழ்ச்சியடைந்தால், புதிய உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ்களுக்கு எதிரான பாதுகாப்பு கவலையளிப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

### இலங்கை நிலைமை மோசமாகலாம்!

இலங்கையில் மேலும் கொரோனா தொற்று தீவிரமடைவதற்கு அரசியல் சார்ந்து எடுக்கப்பட்ட தீர்மானங்களே காரணம். இந்த நிலைமை தொடர்ந்தால் இந்தியாவைப் போல மிகமோசமான நிலைமைக்கு இலங்கை தள்ளப்படலாம் என என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் சுகாதாரஅமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தீவிரமடைந்து வரும் டெல்டா வைரஸ் பரவல் தொடர்பில், ஸ்ரீலங்கா மருத்துவ சங்கத்தினால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. நாட்டில் அடையாளங் காணப்படும் 100 கொவிட் - 19 தொற்றாளர்களில் இருவர் உயிரிழப்பதாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தபோது, பொது மக்கள் சுகாதாரப் பாதுகாப்பிற்கு பொறுப்பான பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் சுசீ பெரேராவினால் வெளியிடப்பட்டுள்ள கருத்து தொடர்பில் விசேட கவனத்தை செலுத்தவேண்டியுள்ளது.

உயர்மட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற பணிப்புரைக்கு அமைவாகவே நாட்டில் நடைமுறையிலிருந்த சுகாதாரப்பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. மாறாக அவை சுகாதார அமைச்சின் தேவைக்கு அமைவாகத் தளர்த்தப்படவில்லை’ என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரத்துறையினதும் மருத்துவ வசதிகளினதும் இயலுமையைப் பெருமளவால் அதிகரித்தாலும், அதனால் பயன்பெற முடியாது. ஏனெனில் இவ்விடயத்தில் அரசியல்வாதிகளினால் அரசியல் ரீதியான தீர்மானங்களே மேற்கொள்ளப்படுகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

### மாணவர்களுக்கும் தடுப்பூசி!

இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்கும் கோவிட் தடுப்பூசி அளிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

அதற்படி 12 தொடக்கம் 18 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களுக்கு பைஸர் அல்லது மொடர்னா தடுப்பூசியளிக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பல்லிசைக்குரிசில்
# ஜீவம் யோசேப் அருளானந்தம்



சங்கீதபூஷணம் ,கலாபூஷணம் திரு. ஜீவம் யோசேப் அருளானந்தம் அவர்கள் 30. 07. 1939 ல் மட்டக்களப்பில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை அமிர்தகளி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும்,உயர் கல்வியை மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியிலும்,பட்டப்படிப்பை இந்தியாவில் அண்ணாமலை பல்கலைக் கழகத்திலும் கற்றார். இவருக்கு 1972 ல் மட் /வந்தாறுமூலைமத்திய மகாவித்தியாலயத்தில் ஆசிரிய நியமனம் கிடத்தது. இவர் புனித மிக்கேல் கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்து 1998 ல் ஓய்வு பெற்றார். இவர், கிழக்கு பல்கலைக் கழகம் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் விரிவுரையாளராகவும்,பரீட்சகராகவும் இருந்துள்ளார். இவர் 11. 07. 2013 அன்று மறைந்துள்ளார்.

மெல்லிசைக்கு ஒரு மகுடம் சூட்டியவர் ஜீவம் யோசேப் அவர்கள் என்றால் அது மிகையாகாது...1960 களில் பல மெல் லிசை நிகழ்ச்சிகளை எமது

**வாரம் ஒரு படைப்பாளி**

மட்டக்களப்புபிரதேசத்திலே மேடையேற்றிய பெருமை இவருக்கு உண்டு.இலங்கை வானொலியில் முதல் மெல்லிசைக் குழுவாக இவரது இசைக் குழுவே கலந்து கொண்டது .ஆனால் என்ன காரணத்தாலோ தொடர்ந்து அது பிரபலப் படுத்தப்பட வில்லை அது இருட்டடிப்பா? ஒதுக்கலா? என்பது தெரியவில்லை.

மட்டக்களப்பிலே பல இசை நிகழ்ச்சிகளை செய்து அனைத்து மக்களின் பாராட்டைப் பெற்ற ஒரு இசைகுழுவாக ஜீவம் இசைக்குழு திகழ்ந்தது. பலபாடல்களை இவர்கள் தாங்களாகவே இசையமைத்து பாடி,மண்வாசத்தை,மட்டு மண் ணின் கலைஞர்களின் திறமையை வெளிப்படுத்தினார்கள்.

ஜீவம் யோசேப் அவர்கள் உணர்ச்சிக் கவிஞர் காசி.ஆனந்தன் அவர்களின் மீன் மகள் பாடுகிறாள்..வாவி மகள் ஆடுகிறாள் என்ற பாடலுக்கு உயிர் கொடுத்து அதை தமிழ்கூறும் நல்லுல கில் உலவவிட்டவர்.இவர் இசையமைத்த பல பாடல்களை குறிப்பிட்டு சொல்லலாம். உதாரணமாக.....

"மீன்பாடும் வாவியிலே ஓடம் விடுவோம்-நாம்
தேனூறும் தமிழிசையை பாடிடுவோம்"

"இதய கீதம் ஓய்வதில்லை"
"கோட்டமுனை பாலத்திலே கச்சான்
காத்தடி-நீ கொட்டாஞ்சட்டை
போட்டுக்கிட்டு போவதேனடி"

"சின்னமாமா என் சீனிமாமா-உன்
சின்னமகள் என்னை பார்த்து சிரிக்க
லாமா"

"எந்நாளும் உனக்காக பாடுகிறேன்
என்னுயிரே உன் நினை
வில் வாடுகிறேன்" .....போன்ற பாடல்களுக்கு அருமையான மெல்லிசை வழங்கி மக்கள் மனதில் பெருமதிப்பு பெற்றவர்களே இந்த ஜீவம் இசைக்குழுவினர்.

திரு. ஜீவம் அவர்கள் அண்ணாமலை பல்க லைக்கழகத்திற்கு செல்வதற்கு முன்னரே பல இசைக்கருவிகளை இசைக்க கற்றுக் கொண்டிருந்தார். இசைப்பட்டதாரியாக திரும் பியபின் பல இசை பாடல்களை இவர் வெளிக் கொணர்ந்தார்.அத்தோடு மட்டக்களப்பிலே முதல் முதல்பாண்டு வாத்தியம் என்ற மேற்கத்தேய இசையை பாடசாலைகளில் அறிமுகம் செய்த பெருமையும் திரு. ஜீவம் யோசேப் அவர்களுக்கு உண்டு. அதைவிட இவர் ஒரு கைதேர்ந்த சிற்பியாவார்.

மட்டக்களப்பில் உள்ள விபுலானந்தர் சிலையை செதுக்கி வடிவமைத்தவர் திரு. ஜீவம் யோசேப் அவர்களே.இவர் தொடங்கிவைத்த இசைப்பயணத்தை தொடர்ந்து,70பதுகளில் உருவான ஆதவன் இசைக்குழு, ஜெயாலயா இசைக்குழு போன்ற இசைக்குழுவினரும் மண்வாசம் நிறைந்த பாடல்களை இசைத்தார்கள். சித்தாண்டி தொடக்கம் திருக்கோ வில் வரை இந்த இசைக் குழுக்கள் நிகழ்ச்சிகள் செய்தன.

இதில் ஜெயாலயாவில் நானும், மைத்துனர் இரா தெய்வராஜனும் இருந்திருக்கின்றோம்.தெய்வராஜன் ஜீவம் இசைக்குழுவில் பாடியிருக்கின்றார்.அவர்களின் புகழ் பெற்ற பாடலான "எந்நாளும் உனக்காக பாடுகிறேன்"என்ற பாடல் தெய்வராஜன் இயற்றிப் பாடியதே.

ஜீவம் அவர்களின் சகோதரர் ஞானம், தெய்வராஜன் அவர்களுடன் மட்டு/சிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஒன்றாக பயின்றவர். .ஜீவம் உன்னதமான கலைஞர். பல்துறை திறமைகளைக் கொண்ட அற்புதமான ஒரு கலைஞர் இவர் ஊரவராலும்,அரசியல் வாதிகளாலும் பல தடவைகள் பாராட்டுகளும், விருதுகளும் பெற்றிருந்தாலும்,அவர் வாழந்த காலத்தில் அவருக்கு ஒரு தனித்துவமான இடத்தை,அல்லது உயரத்தை எமது மட்டக்களப்பு பிரதேச மக்கள வழங்கவில்லையோ என்ற ஒரு நெருடல்,எனக்குள்ளே இருக் கின்றது. இசைத்துறைக்கும், சிற்பக் கலைக்கும் எமது மண்ணில் பெரும் பங்களிப்பு செய்து அமரராகிவிட்ட ஜீவம் யோசேப் அவர்கள் புகழ் நாமம் வாழ்க.

**கோவிலூர் செல்வராஜன்**

# பண்டைய தமிழ் நூல்களில் சிவன்




ஈழத்தில் புகழ் பெற்றவரும் "ஈழத்து லிங்காஷ்டகம் " என்ற பக்திப் பாடலை இயற்றியவருமான பக்திக் கவிஞர், எழுத்தாளர், சிறந்த பாடகர், எல்லாவற்றையும் விட மேலாக பதின்மூன்று வரலாற்று ஆய்வு நூல்களைப் படைத்த வரலாற்று ஆய்வாளர் திருவாளர் என்.கே. எஸ். திருச்செல்வம் அவர்களின் 14வது படைப்பாக பண்டைய தமிழ் நூல்களில் சிவன் என்ற நூல் படைக்கப்பட்டுள்ளது. இந்நூலானது தொல்காப்பியர் காலம் முதல் திருஞானசம்பந்தர் காலம் வரையிலும் காணப்பட்ட சங்ககாலம், சங்க மருவிய காலத்தில் எழுதப்பட்ட 23 நூல்களையும் நுணுக்கமாக ஆராய்ந்து சைவ சமயத்தவர்களின் முழுமுதற் கடவுளான சிவபெருமான் பற்றிய குறிப்புக்களை 80 பாடல்களின் மூலமாக அச சொட்டாகக் காட்டியுள்ளார். இதுவரை காலமும் பண்டைய இலக்கியங்களில் சிவன் பற்றிய குறிப்புக்கள் இல்லை என்று கூறுவோருக்குச் சாவால் விடும் வகையில் பண்டைய தமிழ் நூல்களில் சிவன் என்ற இந்நூல் அமைந்துள்ளது. சங்க நூல்களில் சிவன் என்ற பெயர் இல்லா விட்டாலும், சிவனைக் குறிக்கும் முதுமுதல்வன், மணிமிடற்றான், முக்கட்ச் செல்வன், நீலகண்டன் எனப் பல பெயர்களில் சிவன் குறிப்பிட்டிருப்பதும், அதனோடு இணைந்த புராண வரலாறுகளும், மேலும் அத்தமிழ் இலக்கியங்களைப் பற்றிய போதியளவு அறிமுக விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளமையும், காணக் கூடியதாக இருப்பதோடு, பிற்சேர்க்கையாக நூலாசிரியர் இயற்றிய ஈழத்து லிங்காஷ்டகம் என்ற பாடல் இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இப்பாடலில் இலங்கையின் பழமையான புராதன 160 லிங்கக் கோயில்கள் பற்றியும் கூறியுள்ளமை சிறப்புக்குரியதாகும்.

**கலம்பகம்**

**க.மங்களேஸ்வரி**

# பாம்புகள்



உலக வாழ்க்கை
பாம்புகளால் சபிக்கப்படுகிறது
வாழ்தலின் ஒவ்வொரு நிமிடமும்
விடம் உடலுருவி
எங்கும் பாம்புகளே நெளிகின்றன

திரிந்து கயிறாகி இருதயத்தை இறுக்கவும்
ஒரு தவளையை போல
வாழ்க்கையை விழுங்கவும்
பாம்புகளால் முடிகிறது
நீண்ட உறக்கத்தின் கனவுகளில்
அவை பிணைந்து குட்டியீனும்

உறக்கம் முழுவதும் பாம்புகள்தான்

பாம்புகளை
கொன்ற போதெல்லாம் அவை ஓராயிரமாய்
பெருகி வழிகின்றன
பாம்புகளை உண்டு அழிக்கும்
ஒரு உயிரியை இந்த உலகம்
கண்டறிய வேண்டும்
அல்லது ஒரு எந்திரமாவது பாம்புகளுக்கு
எதிராக
இந்த உலக இயக்கத்திற்கு தேவை

பாம்புகள்
நிலவையும் சூரியனையும் விழுங்கிய பழங்கதைகளை நம்பி
தொடக்கு நீர் வார்க்கும்
இந்த சமூகம் எப்படி பாம்புகளை
கொலை செய்ய முன்வரும்

பாம்புகளை எப்படி கொல்வது
பாம்புகளை யார் எதிர்கொள்வது
பாம்புகளை கொன்ற போதெல்லாம்
அவை
உயிர்த்தெழுந்து பெருகுகின்றனவே
இதோ
காண்டவ வனம் எரித்த
அர்ச்சுனன் போல
மனக்காட்டை எரித்துக்கருக்குகின்றேன்

அதோ
கருகிய பாம்புகள்
தப்பித்துக்கொள்கின்றன
அவை இப்போது
உங்களை சுற்றிக்கொள்கின்றன
இது என்ன அதிசயம்
என் கரிய பாம்புகள் உங்களை சுற்றி
வெள்ளையாகின்றனவே

இப்போது
நீங்கள் உங்கள் மனக்காட்டை எரிக்க
வேண்டும்
பாம்புகளை கொல்வதுதான்
நம் வேலை என்பதனால்
சற்றும் சிந்திக்காது எரித்துவிடுங்கள்
கருகிய அவை
மீண்டும் காண்டவம் போகட்டும்
ஆனால்
பாம்புகளை நம்மால் கொல்ல முடியாது.

**தி. பவித்திரன்**
**திருகோணமலை**

# இலக்கிய உலகில் கால்பதிக்கும் முகர்ணியா



அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளிப் பிரதேசத்தில் இயற்கை எழில் நிறைந்த வேப்பையடி எனும் கிராமத்தில் வசித்து வரும் முகர்ணியா மதிவண்ணன் ஓர் இளம் படைப்பாளர். தற்பொழுது தரம் 12 இல் கல்வி கற்கும் இவர் தனது ஆரம்பக் கல்வி முதல் தற்போது உயர்தரம் வரை வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகிறார். ஆறாம் தரத்தில் கற்கும் பொழுதே இவருக்கு கலை மற்றும் இலக்கியத் துறையில் ஆர்வம் ஏற்பட்டது. கலைத்துறையில் ஏற்பட்ட ஆர்வத்தினால் அன்று முதல் இன்றுவரை பாடசாலையில் நடைபெறும் அனைத்து வித போட்டிகளிலும் பங்குபற்றி வருகிறார். குறிப்பாக தமிழ்த் தினப் போட்டிகள், விவாதப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் மற்றும் கலாசாரப் போட்டிகளில் முன்னிற்கும் இவருக்கு எழுத்தாக்கத்தின் மீதே அதிக ஈடுபாடு உள்ளது.

அதனால் கட்டுரையாக்க போட்டிகளில் பங்கு பற்றி தன்னை வளப்படுத்திக் கொண்டு வரும் இவர் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அம்பாறை மாவட்ட செயலகம் இணைந்து நடாத்திய பிரதேச இலக்கிய போட்டி தொடரில் கொரோனா வைரசும் சக வாழ்வும் எனும் தலைபபினாலான கட்டுரை ஒன்றை முன்வைத்து அப்போட்டியில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டார். அதனைத்தொடர்ந்து நடாத்தப்பட்ட மாவட்ட இலக்கிய போட்டி தொடரில் அதே தலைப்பினாலான கட்டுரை போட்டியில் மாவட்ட மட்டத்திலும் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டார். பாடசாலையில் பல போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றியீட்டி பல சான்றிதழ்களையும் வெற்றிக் கிண்ணம் களையும் பெற்ற போதிலும் பாடசாலை தாண்டி சமூக மட்டத்தில் இதுவே இவரது முதல் வெற்றி கனியாக இருந்தது. அந்த மகிழ்ச்சி இன்னும் பல படைப்புகளை கொடுக்க பெரும் ஊக்குவிப்பாக இருந்தது.

கொரோனா தாண்டவத்தால் பாடசாலைகள் மூடப்பட இணைய வகுப்புக்களில் பங்கெடுத்த இவர் வீட்டில் ஓய்வாக உள்ள போதெல்லாம் தனக்கு பிடித்த எழுத்து துறையை இவரது துணையாக்கினார். பொதுவெளிகளில் நடைபெறும் இலக்கிய துறை சார்ந்த போட்டிகளில் எல்லாம் ஆர்வத்தோடு பங்கெடுத்த முகரணியா தன்னை இன்னுமின்னும் இலக்கிவோட்டத்தில் பங்கெடுக்கும் படைப்பாளியாக மாற்ற கடுமையான பிரயத்தனம் எடுத்து வருகிறார். பாடசாலையில் ஆசிரியர்களின் வழிகாட்டல் மற்றும் ஊக்குவிப்பினாலும், பெற்றோரின் வழிகாட்டல் மற்றும் உதவியினாலும், தனது விடா முயற்சியினாலும் திறமைகளை மென்மேலும் வளர்த்துக் கொண்டிருக்கும் இளம் முயற்சியாளர் இவர்.

தற்போதைய நவீன யுகத்தில் தொழில்நுட்ப சாதனங்களுள் மூழ்கி கல்வியையும் கலையையும் தொலைத்து நிற்கும் இளையவர்கள் மத்தியில் தமிழை நேசிக்கும் ஒருவராக கல்வியில் சிறந்து விளங்கும் அதே சமயத்தில் கலைத்துறையிலும் தன்னை வளர்க்க துடிக்கும் இளம் மொட்டொன்றை அவர் பாடசாலை மாணவராக இருந்த போதிலும் இளம் கலைஞராக அறிமுகப்படுத்தி அவரது வளர்ச்சியில் பங்கெடுப்பதில் மகிழ்ச்சி. இதுவே திறமையுள்ள சாதிக்க நினைக்கும் இளையவர்களுக்கு ஊக்குவிப்பாக அமையட்டும்.







# இளம் எழுத்தாளர் அக்கரைக்குயில் ஹிம்சானா




அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்தில் பிறந்தவர் அக்கரைக்குயில் அ.ஹ ஹிம்சானா. கிழக்கில் வளர்ந்து வரும் எழுத்தாளர்களுள் இவருக்கும் ஓரிடம் இருக்கிறது. இவர் தைக்காநகர் அக்/ சஹ்றா வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலங்களிலேயே கலை மீதான ஆர்வம் இவருக்குள் குடி கொண்டது. இதிலிருந்து கவிதைகளை கிறுக்கி வந்த இவருக்கு பயிற்சியும் முயற்சியும் தொடர்ந்ததால் பாடல்களையும் எழுத சுயமாகவே கற்றுக் கொண்டார்.

தன் பதினொரு வயதிலிருந்து பாடல் ஆக்கங்களைப் படைத்து பல வெற்றிகளுக்கும் சொந்தக்காரியானவர் பாடசாலை போட்டிகளில் எதிலும் பின்நிற்காது தன் திறமைகளை வெளிக்காட்டி பல சான்றிதழ்களையும் பெற்றார். அதன் பின்னர் சமூக வலைத்தளங்களில் நடைபெற்ற கவிதை மற்றும் பாடலாக்க போட்டிகளில் பங்குபற்றி தன்னை தானே வளப்படுத்திக் கொண்டார்.
காலாசாரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டமாவட்ட மட்டப் போட்டிகளில் 2017ல் முதலாமிடமும்2018ல் மூன்றாமிடமும் பெற்றுக் கொண்டார் இதிலிருந்து தன் சொந்த ஊரிலும் தன்னை ஒரு எழுத்தாளராக நிரூபித்தார்.

முகநூல் கவிக் குழும்பங்களில் நடத்தப்பட்டஆண்டு விழாக்களில் பங்கு பற்றி திறமைகளை வெளிக்காட்டி வரும் அக்கரைக்குயில் இதுவரைகவிச்சிகரம் கவித்திலகம் ஈழக்குயில்கவிக்காதலி பாவிளக்கு போன்ற விருதுகளை இலக்கிய துறையில் பெற்றிருக்கிறார்.
இவர் சிறு கதை புதுக்கவிதைகள் கட்டுரைகள் ஹைக்கூ என பல வடிவங்களில் தனதாற்றலை வெளிக்காட்டி கிழக்கில் வளர்ந்து வரும் எழுத்தாளராக பெயர் பெற்றிருக்கிறார். இலக்கியத்துறையில் 15ஆண்டுகளாக எழுதி வரும் இவரது கவிதைகள் விரைவில் நூல் வடிவம் பெற வேண்டுமென ஆசைப்படுகிறார். அவரது ஆசைகள் நிறைவேறி இலக்கிய உலகில் நீண்ட தூரம் பயணிக்க எமது வாழ்த்துகள்.





இளம் கலைஞர் அறிமுகம்
கு.கிலசன்

# கறுப்பு ஜூலை - 1983




ஜூலை 24, 1983 தமிழர்களுக்கு எதிரான நாசகாரத்தனமான வன்செயல்கள் யாழ்ப்பாணத்தில் அதிகாலைவேளையில் தொடங்கிய தினமாகும். அன்றைய தினமே மாலையில் அந்த வன்செயல்கள் தலைநகர் கொழும்புக்கு பரவத்தொடங்கின. அடுத்துவந்த நாட்களில் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் அது பரவியது. ' கறுப்பு ஜூலை' என்று வரலாற்றில் பொறிக்கப்பட்டுவிட்ட அந்த நாட்களின் 38 வது வருட நிறைவு 1983 ஜூலையில் இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் மத்தியில் மோசமான நினைவுகளை மீட்கிறது.



ஒருவார காலமாக தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்செயல்களில் 4000 க்கும் அதிகமான தமிழர்களும் தமிழர்கள் என்று தவறாக கருதப்பட்ட முஸ்லிம்களும் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்தனர். அவர்களில் சிலர் வைத்தியசாலைகளில்வைத்து கொல்லப்பட்டனர். அந்த வன்செயல்களின் விளைவாக 3 இலட்சம் வரையானவர்கள் தங்கள் வீடுவாசல்களை இழந்து இடம்பெயர்ந்தார்கள். இவர்களில் சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் தற்காலிக அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர். தொழிற்சாலைகள் தொடங்கி சிறிய கடைகள் வரை 2500 க்கும் அதிகமான வர்த்தக நிறுவனங்கள் சேதமாக்கப்பட்டன அல்லது நிர்மூலஞ்செய்யப்பட்டன. சேதமாக்கப்பட்ட அல்லது நிர்மூலஞ்செய்யப்பட்ட வீடுகள், குடியிருப்புகள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை இன்னும் சரியாக மதிப்பிடப்படவில்லை.

தமிழர்களுக்கு எதிரான 1983 ஜூலை வன்செயல்கள் தமிழர்களுக்கு எதிரான சிங்கள மக்களின் ஒரு கிளர்ச்சி அல்ல. அந்த வன்செயல்கள் வெடிப்பதற்கு முன்னதாக தமிழர்கள் மீதும் அவர்களின் சொத்துக்கள் மீதும் பரந்தளவில் வன்செயல்களைக் கட்டவிழ்த்துவிடுவதற்கு சதித்திட்டமொன்று தீட்டப்பட்டிருந்தது. அத்தகைய வன்செயல்களைக் கட்டவிழ்த்துவிடுவதற்கு சாட்டாக ஒரு வலுவான சம்பவம் மாத்திரமே தேவைப்பட்டது. ஜூலை 23 சனிக்கிழமை வடக்கில் இராணுவ ரோந்து வாகனங்கள் மீது விடுதலை புலிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்ட சம்பவம் ஜூலை 24 தொடங்கி நாடுபூராவும் வன்செயல்கள் கட்டவிழ்த்துவிடப்படுவதற்கு சாட்டாகியது.

## நடந்தது இதுதான்.

1983 ஜூலை 23 சனிக்கிழமை இரவு மாதகல் இராணுவத்தளத்தில் இருந்து வழமையான ரோந்து வாகனங்கள் புறப்பட்டன. ஒரு ஜீப்பிலும் சிறிய ட்ரக்கிலும் 15 படையினர் இருந்தனர். அவர்கள் அனைவரும் ஸ்ரீலங்கா லைற் இன்ஃபான்றி படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு தலைமைதாங்கியவர் கொழும்பு ஆனந்தா கல்லூரி பழைய மாணவரான 2வது லெப்ரினனண்ட் வாஸ் குணவர்தன. அதேவேளை, விடுதலை புலிகள் இராணுவம் மீதான தாக்குதலை யாழ்ப்பாண நகரத்தில் இருந்து சுமார் 2 மைல்கள் தொலைவில் உள்ள திருநெல்வேலியில் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்தனர். புலிகளின் புதிய இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டிருந்த கல்வியங்காட்டைச் சேர்ந்த சதாசிவம் செல்வநாயகம் என்ற செல்லக்கிளி தாக்குதலை பிரபாகரனின் ஆதரவுடன் திட்மிட்டு மேற்பார்வை செய்தார். யாழ். பலாலி வீதியில் தபால்கட்டைச் சந்தியில் இருந்து தெற்கே 150 மீட்டர் தொலைவில் உள்ள இடமே தாக்குதலுக்கென்று தெரிவுசெய்யப்பட்டது. வீதி ஏற்கெனவே தொலைத்தொடர்பு கேபிளை புதைப்பதற்கென்று தோண்டப்பட்டிருந்தது. புலிகள் கண்ணிவெடிகளை புதைப்பதற்கு இது வசதியாக இருந்தது.

நான்கு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டு அவை வீதியை எதிர்நோக்கியிருந்த தேனீர்க்கடை ஒன்றின் கூரைக்கு கீழ் மறைத்துவைக்கப்பட்டிருந்த வெடிக்கவைக்கும் கருவியுடன் இணைக்கப்பட்டன. சரியான நேரத்தில் கண்ணி வெடிகளை வெடிக்கவைப்பதற்காக செல்லக்களி கூரையில் மறைந்திருந்தார். ஏனைய புலிகள் வீதியின் இரு மருங்கிலும் இருந்த மதில்களுக்கு பின்னால் ஒளிந்திருந்தனர்.

விடுதலை புலிகளிடம் அந்த நேரத்தில் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட 30 முழுநேர உறுப்பினர்களே இருந்தனர். இவர்களில் 19 பேர் திருநெல்வேலி தாக்குதலில் சம்பந்தப்பட்டிருந்தனர். பிரபாகரன், செல்லக்கிளி, புலேந்திரன், பொன்னம்மான், றெஜி, ரஞ்சன் லாலா, கிட்டு, சந்தோசம், விக்டர், அப்பையா, கணேஷ், சுப்பண்ணா, ராமு, ஞானம் மற்றும் ரகு (குண்டப்பா) ஆகியோரே அவர்கள்.

இரு வாகனங்கள் அண்மித்தபோது கண்ணிவெடிகள் வெடிக்கவைக்கப்பட்டன. அவை ஜீப்பின் வலது பக்கத்திலும் ஜீப்புக்கும் ட்ரக்கிற்கும் இடையிலும் வெடித்தன. அதையடுத்து புலிகள் துப்பாகாகிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்ததுடன் கிரனேட்டுக்களையும் வீசினர். படையினரும் பதிலுக்கு தாக்குதல் நடத்தினர். இறுதியில் வாஸ் குணவர்தன உட்பட 13 படையினர் கொல்லப்பட்டனர். கோப்ரல் பெரேரா, லான்ஸ் கோப்ரல் சுமதிபால என்ற இரு படையினரே உயிர்தப்பியவர்கள். புலிகள் தரப்பில் செல்லக்கிளி மாத்திரமே காயமடைந்தார்.

## வெறியாட்டத்தில் படையினர்!

புலிகளின் தாக்குதல் பற்றிய செய்தி தெரியவந்ததும் சிறிலங்கா லைற் இன்ஃபான்றி படைப்பிரிவைச்சேர்ந்த படையினர் வெறியாட்டத்தில் இறங்கினர். அவர்களின் கட்டளை அதிகாரி லெப்.கேணல் உபாலி தர்மரத்ன படையினரை கட்டுப்படுத்த விரும்பாமல் அல்லது இயலாமல் இருந்தார். யாழ்ப்பாணம் முழுவதற்குமான தளபதி பிரிகேடியர் லைல் பல்தசாரும் கூட தனது அதிகாரத்தை செலுத்த இயலாதவராகவோ அல்லது தனது துருப்புகள் மத்தியில் ஒழுங்கு கட்டுப்பாட்டை நிலைநிறுத்த முடியாதவராகவோ இருந்தார்.

சீற்றங்கொண்ட படையினர் கட்டவிழ்த்துவிட்ட வன்செயல்களில் திருநெல்வேலியிலும் சூழவுள்ள பகுதிகளிலும் 51 குடிமக்கள் கொல்லப்பட்னர். அவர்களில் நான் நன்கறிந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் கலா பரமேஸ்வரனும் ஒருவர். ஏழு பயணிகளுடன் வந்த மினிவான் ஒன்று இடைமறிக்கப்பட்டு சாரதி உட்பட எட்டுப்பேரும் நிரையாக நிற்கவைக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர். எனது நண்பரும் "மனிதன் "என்ற சஞ்சிகையின் ஆசிரியரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான விமலதாசனும் ஒருவர். இந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் அடுத்து இராணுவ தளபதி ஜெனரல் திஸ்ஸ ' புள்' வீரதுங்க லைற் இன்ஃபான்றி படைப்பிரிவை யாழ்ப்பாணத்தில் இருந்து இடமாற்றினார். லெப்.கேணல் தர்மரத்னவுக்கு பதிலாக லெப்.கேணல் ஏ.எம்.யூ.செனவிரத்ன நியமிக்கப்பட்டார்.

ஜே.ஆர்.ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் புலிகளினால் கொல்லப்பட்ட 13 படையினருக்கும் ஒரே இறுதிச்சடங்கை கனத்தையில் நடத்தியது. ஜூலை 24 ஞாயிற்றுக்கிழமை கனத்தையில் பெருமளவில் மக்கள் கூடினர். பலர் அரசாங்க வாகனங்களில் அங்கு கொண்டுவரப்பட்னர். மாலையானதும் நிலைவரம் வன்முறையாக மாறத்தொங்கியது. கனத்தையில் இருந்து கும்பல்கள் பொரளை மற்றும் திம்பிரிகஸ்யாய பக்கமாக நகர்ந்தது. தமிழர்களின் வீடுகளும் வர்த்தக நிறுவனங்களும் தாக்கப்பட்டு தீவைக்கப்பட்டன. எசல போயா முழுமதி வானத்தில் பிரகாசமாக தோன்றிக்கொண்டிருக்க தமிழர்களின் நிறுவனங்களில் இருந்து புகைமண்டலம் வான் நோக்கி கிளம்பிக்கொண்டிருந்தது.

## "சண்டே சில் மண்டே கில்"

மறுநாள் ஜூலை 25 தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் காட்டுத் தீ போன்று பரவின. இந்த வன் செயல்களை மலையக தோட்டத்தொழிலாளர்களின் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் " சண்டே சில், மண்டே கில்" என்று பின்னர் வர்ணித்தார். ஞாயிற்றுக்கிழமை போயாதினத்தன்று தொடங்கிய வன்செயல்கள் மறுநாள் திங்கட்கிழமை நாடெங்கும் பரவிய காரணத்தாலேயே அவர் அவ்வாறு கூறினார்.

ஊரடங்கு உத்தரவை பிறப்பிக்குமாறு அன்றைய பொலிஸ்மா அதிபர் ருத்ரா ராஜசிங்கம் திரும்பத்திரும்ப கேட்டபோதிலும், ஜனாதிபதி ஜெயவர்தன திங்கட்கிழமை மாலை வரை அத்தகைய உத்தரவை பிறப்பிப்பதை தாமதித்தார். ஊரடங்கு அமுலில் இருந்ததாக கூறப்பட்டபோதிலும், மூன்று நாட்களுக்கு வன்செயல்கள் தொடர்ந்தன. அவை ஜூலை 27 ஒரு உச்சத்துக்கு வந்தன. இந்திய பிரதமர் இந்திரா காந்தி தனது வெளியுறவு அமைச்சர் பி.வி.நரசிம்மராவை கொழும்புக்கு விசேட தூதராக அனுப்பிய ஜூலை 28 வியாழக்கிழமை வன்செயல்கள் சற்று தணியத்தொடங்கின.

ஜூலை 29 வெள்ளிக்கிழமை கொழும்புக்கு புலிகள் வந்துவிட்டார்கள் என்று பரவிய வதந்தியால் கொழும்பிலும் புறநகர்ப்பகுதிகளிலும் மக்கள் பீதியடைந்தார்கள். அந்த விதிவசமான " கொட்டி தவச" (புலி தினம்) அன்று பிற்பகல் தமிழர்களை மீண்டும் குண் ட ர்கள் கொலைசெய்தார்கள். புலிகள் கொழும்புக்கு வரவில்லை என்று உறுதியானதன் பின்னரும் கூட படுகொலைகள் தொடர்ந்தன. இறுதியாக, ஜூலை 30, 31 திகதிகளில் வன்செயல்கள் படிப்படியாக தணிந்தன. நிலைவரத்தை வழமைக்கு கொண்டுவருமாறு ஜெயவர்தன அரசாங்கத்தை சர்வதேச அபிப்பிராயங்களும் நெருக்குதல்களும் நிர்ப்பந்திக்க ஆரம்பித்த நிலையில் , ஆகஸ்ட் அளவில் வன்செயல்கள் முடிவுக்கு வந்தன.

நன்றி
டி.பி.எஸ்.ஜெயராஜ்

# Sinopharm வெற்றிகரமான தடுப்பூசியா?






அண்மையில் கிழக்கு மாகாணமெங்கும் பொதும~க்களுக் ஏற்றப்பட்டது சீனா விலிருந்து கொணரப்பட்ட சினோ~பாம் தடுப்பூசி என்பதை அறிவோம். அந்த தடுப்பூசி பற்றி பலரும் பலவிதமாகச் சொல்லக்கேள் விப்பட்டிருக்கிறோம். எனவே அதுபற்றிய விளக்கத்தை கல்முனை~நெற் வாசகர்களுக்காகத் தருகிறது.

## Sinopharm தடுப்பூசி பற்றிய சில பொதுவான கேள்விகளுக்கான பதில்கள்

### Sinopharm தடுப்பூசியினால் கோவிட் நோய் ஏற்பட முடியுமா?

Sinopharm தடுப்பூசியில் முற்றிலும் செயலிழக்கம் செய்யப்பட்ட வைரஸே காணப்படுகி~ன்றது. இதனால், அது எந்த வகையிலும் உடலில் செயல்பட~வோ, பெருக்கமடையவோ முடியாது. எனவே, நோயை உண்டாக்கல் சாத்தியமில்லை.

### இலங்கையில் கர்ப்பிணித் தாய்மார~களுக்கு ஏன் Sinopharm தடுப்பூசி வழங்கப்படவில்லை?

இதற்கான காரணம், கர்ப்பிணி தாய்மார்களிடையே இந்த தடு~ப்பூசியைப் பயன்படுத்துவது குறித்த ஆராய்ச்சி தகவல்கள் இதுவரை போதுமான அளவில் தெரிவிக்க~ப்படவில்லை. இருப்பினும், தடுப் பூசியின் தன்மை மற்றும் கூறுகளை கருத்தில் கொண்டு, உலக சுகாதார நிறுவனம் தடுப்பூசியின் செயல்~திறனும் பாதுகாப்பும் கர்ப்பிணித் தாய்மார்களிடையேயும் மாற்றமி~ன்றியே காணப்படும் என நம்புகிறது. எதிர்காலத்தில் இத்தடுப்பூசி கர்ப் பிணித் தாய்மார்களுக்கு வழங்குவதா?, எச்சந்தர்ப்பத்தில் வழங்குவது? போன்ற முடிவுகள் தடுப்பூசி தொடர்பாக நிகழ்க~ால புதிய தரவுகளுக்கு ஏற்ப தொற்று நோய் விஞ்ஞான ஆய்வகத்~தால் தீர்மானம் மேற் கொள்ளப்படும்.

### எதிர்காலத்தில் தாய்மையை எதிர்பார்க்கும் ஒருவர் தடு~ப்பூசி பெற்றுக் கொள்வது சிக்கல்களை ஏற்படுத்துமா?

தடுப்பூசியைப் பெற முன் கர்ப்பத்தை பரிசோதிக்க வேண்டியதன் அவசியத்தினை உலக சுகாதார நி~றுவனம் பரிந்துரை செய்யவில்லை. இத்தடுப்பூசி எந்த வகையிலும் ஒரு~வரில் மலட்டுத்தன்மையை ஏற்படு~த்தாது. எனவே, எதிர்காலத்தில் தாய்மையை எதிர்பார்க்கும் ஒருவர் இந்த தடுப்பூசிப் பெற்றுக் கொள்ள எந்த தடையும் இல்லை. கர்ப்ப கால~த்தில் கோவிட் நோய், உங்களை எவ்வாறு பாதிக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, முன்பே தடு~ப்பூசியைப் பெற்றுக் கொள்வது புத்திசாலித்தமாகத் தெரிகின்றது.

### தடுப்பூசி 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்றதா?

இந்த தடுப்பூசி தொடர்பாக செய்யப்பட்ட மருத்துவ பரிசோ~தனைகளில் எந்தவொரு வயதி~னருக்கும் எந்தவொரு பிரச்சனை~யும் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட வில்லை. இருப்பினும், தடு~ப்பூசி வழங்கப்பட்ட மாதிரி யில் (sample) வயதானவர்களில் எண்ணிக்கை குறைந்தளவு இருந்~தமையால் இத்தடுப்பூசி முதன்மு~தலில் இலங்கையில் அறிமுகப்படு~த்தப்பட்டபோது வயதானவர்களிற்கு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட வில்லை. ஆனால், தற்போமை~தய தரவுகளை மேலும் கருத்தில் கொண்டும், தற்போது இந்த நோய் இலங்கையில் பரவி வருகின்ற ஆபத்தைக் கருத்திற் கொண்டும் எந்தவொரு நோயாலும் பாதிக்க~ப்படாத 60 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் இந்த தடுப்பூசி வழங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.

மேற்கூறப்பட்ட தகவல்கள் அனைத்திலும் இருந்து தெளிவா~

உள்ளூர் நிபுணர்களின் பங்கேற்பு, ஆலோசனையுடன் எடுக்கப்படுகி~றது என்பதாகும். சமீபத்திய தரவு~களைப் பயன்படுத்தியும் , நாட்டில் தொற்றுநோய் பரவும் தன்மையை கருத்திற் கொண்டும், நோய்க்கு எதிராக கிடைக்கக்கூடிய பாதுக~ாப்பிற்கான முழுப் பொறுப்பையும் நிச்சயப்படுத்தியே தடுப்பூசி வழங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.

### Sinopharm ஒரு வெற்றிகரமான தடுப்பூசியா?

வழங்கலுக்கான முடிவுகள் சர்வ~தேச மட்டத்தில் மட்டுமன்றி, பல. கோவிட் நோயைத் தடுப்பதற்கான வெற்றிகரமான தடுப்பூசி Sinopharm என்பதை சமீபத்திய ஆராய்ச்சித் தரவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. இத் தடுப்பூசி ஏற்கன~வே பயன்பாட்டில் உள்ள பஹ்ரைன் போன்ற நாடுகளில் பெறப்பட்ட ஆய்வுத் தரவுகள் மூலம் மேலும் இது உறுதிப்படுத்தப்படுகிறது.

தடுப்பூசி மூலம் மட்டும் ஒரு நாடு ஒரு தொற்றுநோயிலிருந்து மீள முடியாது. உரியவாறு பிற பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக~ளும் முறையாகப் பின்பற்றப்பட வேண்டும். எது எவ்வாறிருப்பி~னும், கோவிட் தொற்று நோய்க்கு எதிரான போராட்டத்தில் நம்மிடம் உள்ள மிகச் சக்தி வாய்ந்த ஆயு~தங்களில் ஒன்று தடுப்பூசி ஆகும். உலகளாவிய அளவில் தடு~ப்பூசிகளின் பற்றாக்குறை நிலவும் இந்நேரத்தில், பெரும் முயற்சிக~ளின் பலனாகவே நம்நாடு இத்~தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டது. அதனால்தான், தடுப்பூசிப் பெற்றுக் கொள்ள உங்களு~க்கு ஓர் வாய்ப்புக் கிடைத்தால், முதல் முறையிலேயே அதைப் பெற்றுக் கொள்வது முக்கியமாகும்



# பெண்ணுக்கு பெருமையும், மங்கலமும் தரும் மெட்டி

பெண்ணுக்கு பெருமையும், மங்கலமும் தரக்கூடிய அணிகலன்களுள் முக்கியமானது மெட்டி. திருமணம் ஆனதும் கால் கட்டை விரலுக்கு அடுத்த விரலில் பெண்கள் மெட்டி அணிவர், அந்த விரலில் மட்டும் மெட்டி அணிய வேண்டும், என்று பெரியோர்கள் சொல்லி வைத்ததற்கு காரணம் உண்டு.

கால் கட்டை விரலுக்கு அடுத்த விரலில் தான் கருப்பையின் நரம்பு நுனிகள் வந்து முடிகின்றன. இம்மெட்டி நடக்கும் போது அழுத்தப்படுவதால் கருப்பை வளர்ச்சிக்கு இந்த அழுத்தம் பெரிதும் உதவுகின்றது, அதனால்தான் திருமணத்தில் பெண்கள் காலில் மெட்டியை அணிகின்றனர். காலில் கீழ்ப்பகுதியில் இதயம் முதல் மூளை நரம்புகள் வரை எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும் மிக நுண்ணிய நரம்பு ஸ்தானம் உள்ளன. மெட்டி தேய்ந்த பிறகு தூக்கி எறியக் கூடாது. அதை அப்படியே கடையில் கொடுத்து உருக்கி வரும் புது வெள்ளியால் தான் மறுபடியும் மெட்டி செய்ய வேண்டும். எந்த காரணம் கொண்டும் மெட்டியை காலிலிருந்து நீக்கலாகாது என்பர் பெரியோர்கள். அக்காலத்தில் மணமகனுக்கும் மெட்டி உண்டு என்று திருமங்கை ஆழ்வாரின் வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது. இப்பொழுதும் கூட திருமணத்தின் போது ஆண்களுக்கும் மெட்டி அணியும் பழக்கம் உண்டு.

# பெண் தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தும் வேலைத்திட்டம்



கிரிசலீஸ் நிறுவனம் அம்பாறை மாவட்டத்தில் பெண் தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தும் நோக்கில் ஜப்பான் மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பின் நிதி உதவியின் கீழ் பெண்களுக்கான பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றினை காரைதீவு மற்றும் நாவிதன்வெளி பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

# களமிறங்கு கண்ணே!




களமிறங்கு கண்ணே
கண்ணகியாக
காணாத கதைகள் பேசி
காவியத்தலைவியாக தடம் பதித்திடு

அநியாயம் நிகழும் போது
அச்சம் என்ன நாணம் என்ன
தூக்கி போட்டிடு
துள்ளி எழுந்திடு
துயர் துடைத்திடு
துக்கம் களைந்திடு

பெண் என்று பாடம் சொல்வார்கள்
பள்ளியறை தான்
பண்பாடு என்பார்கள்
தள்ளி வைத்திடு
தனலாக எழுந்திடு
அநியாயத்தை கொழுத்திடு
அம்மன் போல் நின்றிடு

முட்டாள்கள் வரிசையில்
முன் நிற்பவன்
வசை பாடுவான்
வதம் செய்வான்
விளையாடிப் பார்
வெற்றியும் பெறுவாய்

# பொன் மொழிகள்

1.முடியாது என்று நீ சொல்வதை எல்லாம் யாரோ ஒருவன் எங்கோ செய்துகொண்டிருக்கிறான்.
~அப்துல் கலாம்~

2. உதவும் கரங்கள் பிரார்த்திக்கும் உதடுகளை விட சிறந்தது.
~அன்னை தெரஸா~

3. இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய குணங்கள் எல்லாவற்றிலும் மிகமிக உயர்ந்தது பொறுமை.
~ மகாகவி பாரதியார்~


4.இந்த உலகமே உன்னைத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்றால், நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே!
~ஹிட்லர்~

5.கஷ்டத்தை அனுபவிக்காமல் எந்தவொரு மனிதரும் அவரது இலட்சியத்தை அடைய முடியாது.
~காமராஜர்~

# விடுகதைகள்

1. ஓர் அரண்மனையில் முப்பத்திரெண்டு காவலர்கள் அது என்ன? பற்கள்
2. கடல் நீரில் வளர்ந்து , மழை நீரில் மடிவது என்ன ? உப்பு
3. ஓயாமல் இரையும் இயந்திரமல்ல, உருண்டோடிவரும் பந்து அல்ல அது என்ன? கடல்
4. காலையிலும் மாலையிலும் நெட்டை மதியம் குட்டை நான் யார்? நிழல்

5. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. – அது என்ன? சைக்கிள்






ஜெ. ஜஸ்மிதன்
தரம் – 04 B
மட்டக்களப்பு
கோட்ட முனை கனிஷ்ட வித்தியாலயம்

# காலம் காத்திரமானது

எக்காலத்திலும் முயற்சியோடு உழைப்பவர்கள் வறுமையில் வாடுவதில்லை. காலம் அறிந்து செயலாற்றின் வெற்றிப் பாதையில் வீறு நடை போடலாம்.

காலமறிந்து கடமைதனை உணர்ந்து செய்யும் செயல்கள் நம்மை உயரத்திற்கு அழைத்துச் செல்லும்.

மனித வாழ்க்கையில் காலம் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றிருக்கின்றது. மனித வாழ்க்கையில் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை ஒவ்வொரு நிகழ்வும் காலத்தினாலே தீர்மானிக்கப்படுகின்றது.

காலம் எதற்காகவும் யாருக்காகவும் காத்திராமல் முன்னோக்கி சென்று கொண்டிருக்கும். ஆகவே ஒவ்வொரு நிமிடத்தையும் வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும்.

நாம் ஒவ்வொரு நிமிடத்தையும் வீணடிக்க எமது வாழ்நாளில் ஒவ்வொரு நிமிடம் குறைந்து கொண்டே இருக்கும். காலத்தை பொன் போன்று பயன்படுத்த வேண்டும்.

காலம் மிகவும் வேகமாக கடந்து செல்லக் கூடியது. உரிய காலத்தில் உரிய கடமைகளை செய்து முடித்தல் வேண்டும். தகுந்த நேரம் முடிவடைந்து விட்டால் பின்பு அந்த கடமைகளை செய்தும் அதனால் பயன் ஒன்றும் இருக்காது. இதனையே “இளமையில் கல், பருவத்தே பயிர் செய்” என்று நமது முன்னோர்கள் குறிப்பிட்டுள்ளனர்.அதாவது இளமையில் கற்காது விடின் அந்த கல்வியை பின்பு கற்றாலும் அதனால் பயனேதும் இல்லை. பருவம் பார்த்தே பயிர் செய்ய வேண்டும். பருவம் தப்பினால் பயிர்கள் செழித்து வளராது.
தக்க நேரத்தில் அந்தந்த கடமைகளை செய்து முடித்தால் மாத்திரமே அதன் முழுப்பயனை அடைந்து கொள்ள முடியும். இதுவே காலத்தின் சிறப்பு ஆகும்.
நாம் செலவளித்த காலத்தை திரும்ப பெறமுடியாது. ஆகவே அதனை சரியான முறையில் பயன்படுத்துதலே வெற்றியை பெற்றுத்தரும். இன்றைய நவீன உலகில் அதிகம் பேசப்பட்டு வருகின்ற ஒன்றாக நேரமுகாமைத்துவம் காணப்படுகின்றது.

மனிதர்கள் எந்த காரியத்தை செய்தாலும் நேரம் போதாது என்ற காரணத்தையே கூறிவருகின்றனர். இதற்கான சரியான காரணம் அவர்கள் தமக்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள நேரத்தை சரியாக பயன்படுத்தவில்லை என்பதாகும்.

நேரமுகாமைத்துவம் எனப்படுவது ஒரு மனிதனிற்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள நேரத்தை எவ்வாறு திட்டமிட்டு சிறப்பான வகையில் பயன்படுத்தலாம் என்பதாகும்.

நாம் குறிப்பிட்ட நேரத்திற்குள் எந்த செயல்களை செய்து முடிக்கப்போகின்றோம் என்பதை முன் கூட்டியே தீர்மானிக்கவேண்டும். அதற்கேற்ப செயலாற்றும் போது வெற்றி பாதையை இலகுவில் அடைந்து கொள்ள முடியும்.

உலகின் சிறந்த ஓட்டப்பந்தய வீரரான உசைன் போல்ட் ஒலிம்பிக் விளையாட்டில் ஒன்பது தங்கப்பதக்கங்களைப் பெற்றவர். அவர் ஒலிம்பிக் விளையாட்டின் மூலம் சம்பாதித்த பணம் நானூறு கோடிகள்.

**சி.தாரணி.**
**தி/விபுலானந்தா கல்லூரி.**
**திருகோணமலை.**



ஆசிரியை ஹேமலதா

# கொவிட் காலத்திலும் மாணவர்களை சாதனையாளர்களாக்கிய ஆசிரியை

**நேர்காணல்**
**கிரிஷாந்**

**மாணவர்களை சாதனை செய்யத் தூண்டும் ஆசிரியர்கள் கிடைப்பது மாணவர்கள் செய்த புண்ணியம் என்றே கருத வேண்டும் அந்தவகையில் கொரோனவைரஸ் பரவலுக்கு மத்தியில் இந்தியாவில் மாணவர்கள் பலரை சாதனையாளர்களாக்கிய தன்னிகரில்லா ஆசிரியை ஒருவர் குறித்து நாம் கவனம் செலுத்துவோம் அவரை தேடி கண்டுபிடித்து மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் நேர்காணல் ஒன்றை மேற்கொண்டோம் அவரும் இன்முகத்துடன் கள்முனை நெற் பத்திரிகைக்கு பேட்டியை வழங்கினார்**

## உங்களை பற்றி கூறுங்கள்

எனது பெயர் ஹேமலதா நான் சேலம் ,தமிழ்நாடு. தனியார் பள்ளியில் ஓவிய ஆசிரியராக பணியாற்றுகிறேன். நான் ரோட்டரி சங்க உறுப்பினர். சமூக சேவை மற்றும் பெண்கள் ,குழந்தைகள் முன்னேற்றத்தில் மிகவும் ஈடுபாடு அதிகம். வர்ச்யூ உலக சாதனை புத்தகத்தில் மக்கள் தொடர்பு செய்தியாளராக உள்ளேன். கிரியேட்டர்ஸ் அகாடமி என்ற அமைப்பில் மாணவர்களுக்கு ஓவியம்,கலை சம்பந்த பட்ட வகுப்புகள் எடுத்து கொண்டு உள்ளேன்.இந்த அமைப்பு 3ஆண்டுகளாக செயலில் உள்ளது.

## மாணவர்கள் உலக சாதனை படைக்க வேண்டும் . எனும் உங்கள் முயற்சிகளை பற்றி கருத்துகளை பகிர்ந்து கொள்ளுங்கள்

எனக்கு மாணவர்களின் கலை திறனை வெளி கொண்டு வருவதில் விருப்பம் அதிகம்.
மேலும் இன்றைய சூழ்நிலையில் திறமைகள் அதிகம் இருந்தும் வெளி கொண்டு வராத சூழ்நிலையே உள்ளது.
கொரானா ஊர் முடக்க காலத்தில் மாணவர்களுக்கு இணையதள வகுப்புகள் மட்டுமே நடைபெற்று கொண்டு உள்ளது.இந்த சூழ்நிலையில் வீட்டில் இருக்கும் நேரத்தில் பெண்கள் மற்றும் மாணவ,மாணவியர்கள் திறமையை வளர்த்து கொள்ள ஏதுவான நேரமாக மாற்ற நினைத்தேன்.
இணையதளத்தில் கலை சம்பந்த பட்ட போட்டிகள் நடத்தினேன்.

மேலும் அரசாங்கத்தால் நடைபெறும் அனைத்து போட்டிகளிலும்அமைப்பாளராக போட்டிகள் நடத்த ஆரம்பித்தேன். இந்த சூழ்நிலையில் மைக்ரோ ஆர்டிஸ்ட் மற்றும் பல்வேறு உலக சாதனைகளின் சொந்த காரரான திரு.சுரேஷ்மற்றும் திரு.சந்தோஷ் அவர்களின் நட்பு கிடைத்தது.
இருவரின் எண்ணமும் ஒன்று போல் இருந்ததால் இணைந்து செயல் பட துவங்கினோம்.
முன்கள பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக Big picture season 1 இணையதளத்தில் முதன் முதலாக நடத்தினோம்.
இணையதளத்தில் முதன் முதலாக உலக சாதனையை நிகழ்த்திய பெருமையும் எங்களை யே சேரும்.
இந்த நிகழ்வை உலகளாவிய அளவில் செய்தோம்.
எங்களது பங்கேற்பாளர்கள் சிங்கபூர்,மலேசியா, ஜோர்டான், ஆஸ்திரிலேயா ஆகிய நாடுகளில் இருந்து பங்கு பெற்றனர்.
அதன் பிறகு ரோட்டரி கிளப் உடன் இணைந்து இந்திய அளவிலான ஓவிய போட்டகயை நடத்தினோம்.
பிறகு காகிதத்தின் வலிமையை உணர்த்த காகித பை தயாரிப்பு பற்றிய உலக



சாதனை நிகழ்வை நடத்தினோம்.
இந்த நிகழ்வுகழ் அனைத்தும் 2020 ஆம் ஆண்டு நடைபெற்றது.
இந்த உலக சாதனையில் அரசங்க பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாக உலக சாதனை சான்றிதழ் வழங்கினோம்.
இந்த சாதனைகளை வேறு தனியார் அமைப்பு களில் செயல் படுத்தினோம்.
மாணவர்கள் திறமையை வெளி கொண்டு வர அடுத்தவர்களின் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற வைப்பது விட நாங்களே உலக சாதனை புத்தகத்தை நிறுவி அதன் மூலம் அலவர்களுக்கு அங்கீகாரம் கிடைக்க முயற்சி செய்து வர்ச்யூ உலக சாதனை புத்தகம் தொடங்கினோம்

இதன் மூலம் பலதரபட்ட மாணவர்கள் மற்றும் பெண்கள் அங்கீகாரம் வழங்கி கொண்டு உள்ளோம். இந்த உலக சாதனை புத்தகம் நிறுவி 4மாதங்கள் முடிவு அடைந்து உள்ளது.
¸ உலக சாதனை புத்தகத்தில் வயதுவித்தியாசம் இன்றி அனைவரும் பங்கு பெறும் விதமாக பல வாய்ப்புகள் வழங்கினோம். அவற்றில் சில இங்கே பகிர்கிறேன்.
மதுரை யை சேர்ந்த கிருத்திகா , பெண்மையை போற்றும் விதமாக காபி தூளில் ஓவியம் வரைந்து அசத்தியுள்ளார்.
சேலத்தில் 11வயது மாணவி அஸ்வதா 100விதமான கைவினை பொருட்களை 13மணிநேரத்தில் செய்து செல்போன் வேண்டாம் கைவினை பொருட்களை கற்ப்போம் என விழிப்புணர்வு ஏற்படுத்தி சாதனை செய்தார்.
மேலும் சேலம் சுவேதா 12ம் வகுப்பு மாணவி கொரானா விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக 120மீட்டர் நீளத்தில் சாலையில் கொரானா வழிமுறைகளை ஓவியமாக 3மணி நேரத்தில் வரைந்து சாதனை படைத்துள்ளார்.சேலம் சார்ந்த சைந்தவி 6ம் வகுப்பு மாணவி கொரானா கொற்றால் பதிப்ப அதிகம் ஏற்பட கூடாகு என பிரார்த்தனை செய்து 2மணி 15நிமிடங்கள் தொடர்ச்சியாக 25கீர்த்தனைகள் வீணையில் வாசித்து உலக சாதனை படைத்தார்.
பள்ளி மாணவ மாணவியர்கள் மட்டும் இன்றி இல்லதரிசிகளும் ஊரடங்கு காலத்தில் சாதனை படைக்க முயற்சி எடுத்தோம்.
அதில் விசாகபட்டினத்தை சார்ந்த கிருத்திகா கணேஷ் அவர் கற்ற தூரிகை ஓவியங்களை தனது இல்லம் முழுக்க தீட்டி சாதனை படைத்துள்ளார்.

மேலும் சேலம் சார்ந்த திருமதி.பத்மபிரியா திருவாசகத்தின் 133அதிகாரம் 133அவரை விதையில் 1மணி நேரத்தில் எழுதி சாதனை படைத்துள்ளார்.
இது மட்டும் இன்றி அன்னையர் தினத்தை கொண்டாடும் விதமாக 250 பங்கேற்பாளர்களுடன்
சாக்பீஸ் கார்விங் ல் இதயம் வடிவமைப்பு செய்ய கற்று கொடுத்து உலக சாதனையும் படைத்துள்ளோம்.
தற்பொழுது அனைத்து வயதினருக்கும் குடும்பத்துடன் பங்கு பெறும் விதமாக திருக்குறளும் அதன் பொருளும் என்ற உலக சாதனை முயற்சி நடத்தி கொண்டுள்ளோம்.
1330குறள்கள் 1330 பங்கேற்பாளர்கள் என இணையதளத்தில் அனைவரையும் பங்கு பெற செய்து உலக சாதனை முயற்சியில் ஈடுபட்டு உள்ளோம்.இந்த உலக சாதனையில் இந்தியா மட்டும் இன்றி இலங்கை,சிங்கபூர் , துபாய் என அயல் நாடு பங்கேற்பாளர்களும் பங்கு பெற்றுள்ளனர்.
எனது சாதனை முறய்சி நோக்கம் எந்த வித திறமைக்கும் அங்கீகாரம் வேண்டும். மேலும் இன்றைய சூழ்நிலையில் திறமை இருந்தும் வெளி கொண்டு வர இடம் கிடைக்காமல் தடுமாறும் அனைவரையும் வெளி உலகிற்க்கு கொண்டு வருவதே ஆகும்.
இந்த முயற்சியில் எனக்கு ஊடக துறை மற்றும் பத்திரைக்கு துறையிலும் முழு ஒத்துழைப்பு கிடைத்துள்ளது.
எனது பயணம் திறமையின் தேடலுக்கு அங்கீகாரம் நன்றி.



# ஹிஷாலினிக்கு நீதி கிடைக்குமா?



**கல்முனையில்.....**





**மட்டக்களப்பில்.....**





**வவுனியாவில்..**



**யாழ்ப்பாணத்தில்..**




**மலையகத்தில்.....**



**மன்னாரில்...**




**வாழைச்சேனையில்..**



**சிறுமி ஹிஷாலினியின் உடல் நேற்று தோண்டி எடுக்கப்பட்ட போது ..**









பட உதவி . பி.சிறிகாந்த்

HDO